எஞ்சி இருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், பதில் கிடைத்தது வரையிலும் கடைசி நாளில் எல்லா கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் ஒரே நாளில் முடிவுக்கு கொண்டு வருகிற ஒரு மரபு இருந்து வருகிறது. அந்த வகையில் இதுவரையிலும் பதில் கிடைத்த 5 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இப்போது வைக்கப் பட்டு இருக்கின்றன. திருமதி ரமணி நல்லதம்பி கொடுத்து இருக்கிற எஞ்சிய இன்னும் 3 கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு உரிய பதில் அவருக்கு நேரடியாக அனுப்பப்பட்டு இருக்கிறது.

மற்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்தமட்டில் இன்னும் துறைகளிலிருந்து நமக்குப் பதில் வரவில்லை. விதி 55 (3)-ன்படி இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு எல்லாம் 7 நாட்களுக்குள் துறையிலிருந்து நமக்குப் பதில் வந்துசேர வேண்டும், 7 நாட்களுக்குள் அவையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று விதி 55 (3) திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர்கள் கவனத்தில் கொண்டு, வர இருக்கிற காலங்களில் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிற கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு எந்த வகையிலேயும் 7 நாட்களுக் குள் பதில் பெற்று அனுப்பி வைக்கிற முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்:

1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் அறிக்கையின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழுவின் ஆறாவது அறிக்கை, 9-வது பேரவையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய 30-வது அறிக்கையை அளிக் கின்றேன்.

தமிழ்நாடு அரசின் 1982-83 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் மீது இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் மற்றும் தொழில்துறை தொடர்பான பத்திகள் குறித்த பொதுக் கணக்குக்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1992 பிப்ரவரி 10

குழு அளித்த 5-வது அறிக்கை, 9-வது பேரவையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய 31-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

தமிழ்நாடு அரசின் 1965-66, 1969-70 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் மீது இந்தியத் தணிக்கைத் தலைவரின் சிவில் அறிக்கையில், ஊரக வளர்ச்சித் துறை குறித்த பொதுக் கணக்குக்குழு அளித்த முந்தைய அறிக்கைகள் 4-வது அறிக்கை, 7-வது பேரவை, மற்றும் 32-வது அறிக்கை, 8-வது பேரவையில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய 32-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வருவாய் வரவினங்கள், வருவாய்த் துறை குறித்த பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழுவின் 33-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1973-74 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் (வணிகம்) மீது பொது நிறுவனங்கள் குழு 1989-90 அளித்த 29-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 29-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளின் (வணிகம்) மீதான பொது நிறுவனங்கள் குழுவின் 1985-86, 23-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 30-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31--3—1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) (எண் 4/1989) செய்தி சுற்றுலாத்துறை தொடர்பான பத்தி மீதான குழுவின் 31-வது அறிக்கையை அளிக்கின்றேன்.